## குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி

அன்புக்குரிய பங்குதாரர்களே,

“செயலாற்றலின் ஊக்கம்” என்ற தலைப்பில் அமையப்பெற்ற 2024/25ம் ஆண்டுகளுக்கான DIMO வின் வருடாந்த அறிக்கை தொடர்பில் உறுதியான மற்றும் நம்பிக்கையுடன் நான் உங்கள் முன்னிலையில் உரையாற்றுகின்றேன். நிறுவனத்தின் வரலாற்றில் நிதிசார் செயல்திறனின் விதிமுறைகளில் இவை மிகவும் கடினமான ஆண்டுகளாக இருந்துள்ளன. இருப்பினும் நாம் அதிலிருந்து வலுவாக உயர்வடைந்து, நிலையான பரிணாமத்திற்கான அடித்தளத்தை அமைத்துள்ளோம்.

இந்த வருடம் தொடர்ச்சியான பொருளாதார ஸ்திரமற்ற தன்மைக்கு எதிராக வெளிப்பட்டது. 2024ம் ஆண்டானது சுற்றுலாத்துறை மற்றும் நிர்மாணத்துறையில் பிரதிபலித்த பெரும் பொருளாதார மீள் எழுச்சியின் அடையாளங்களை வெளிப்படுத்திய போதிலும், மொத்த உள்நாட்டு வருமானம், வேலைவாய்ப்பு மற்றும் பொது நலன்புரி மட்டங்கள் முன்னைய நெருக்கடி தரநிலைகளுக்கு கீழ் இருந்தன. தேசிய வறுமை வீதம் உயர்ந்தளவில் இருந்தது. அத்துடன் இந்த சமூக பொருளாதார சவால்கள் நேரடியாக எமது சந்தைகளில் தாக்கம் செலுத்தியதுடன் குறிப்பாக வாகன விற்பனையை வெகுவாக பாதித்தது. வாகன இறக்குமதி மீதான தடையை நிவர்த்தி செய்தமை நிவாரணத்தை வழங்கிய போதிலும், உயர் இறக்குமதி வரி விதிப்பானது விலை குறைப்பு மற்றும் கேள்வியில் தொடர்ச்சியாக தாக்கம் செலுத்தியது.

இந்த நிலைமைகளுக்கு மத்தியில், நீண்டகால பெறுமதி உருவாக்கத்தில் நாம் தொடர்ந்தும் கவனம் செலுத்தினோம். பங்குதாரர் பெறுமதிக்கான

எமது மீள் தன்மை மற்றும் உறுதிப்பாட்டை மீள உறுதிப்படுத்தும் வகையில் கட்டமைப்பு மறுசீரமைப்புகள், டிஜிட்டல் பரிணாமம் மற்றும் எதிர்காலத்தை மையமாகக் கொண்ட முயற்சிகளை நாம் மேம்படுத்தியுள்ளோம்.

இந்த ஆண்டு நிதி இழப்பு அறிக்கையை நாம் கொண்டிருந்தாலும், எதிர்வரும் ஆண்டுகளில் நிலையான வளர்ச்சியை உறுதிசெய்வதற்காக இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அர்த்தமுள்ள அடிப்படை வேலைத்திட்டங்கள் தொடர்பில் நாம் பெருமை கொள்கின்றோம். அந்த பயணம் மற்றும் நாம் செய்யும் அனைத்திலும் ‘‘நேர்த்தியான பங்காளராக’’ இருப்பதில் எமக்குள்ள அர்ப்பணிப்பை இந்த அறிக்கையானது வெளிப்படுத்துகிறது.

## எமது நோக்கம் நிலைத்திருப்பது

‘‘கனவுகளுக்கும் அபிலாஷைகளுக்கும் ஊக்கமளித்தல்’’ என்ற எமது நோக்கத்திலும், நேர்த்தியான பங்காளராக இருப்பதற்கான எமது வர்த்தக நாம வாக்குறுதியிலும் நாம் தொடர்ந்தும் உறுதியாக இருக்கின்றோம். இந்த கொள்கைகள் எமது மூலோபாய சீரமைப்பு மற்றும் பங்குதாரர்களுடனான இணைப்பை வழிநடத்துகிறது. எமது செயற்பாட்டு சூழலில் ஏற்படும் மாற்றங்களை அங்கீகரித்து, எமது மூன்று மூலோபாய தூண்களில் நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றோம்: அவையாவன பல்வகைப்படுத்தல், வேறுபடுத்தல் மற்றும் ஒத்துழைத்தல். இந்த அறிக்கையில் விளக்கமளிக்கப்பட்டுள்ள ஒன்பது மூலோபாய முன்னுரிமைகள் ஊடாக அவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

# “செயலாற்றலின் ஊக்கம்”

“கனவுகளுக்கும் அபிலாஷைகளுக்கும் ஊக்கமளித்தல்” என்ற எமது நோக்கத்திலும், நேர்த்தியான பங்காளராக இருப்பதற்கான எமது வர்த்தக நாம வாக்குறுதியிலும் நாம் தொடர்ந்தும் உறுதியாக இருக்கின்றோம். இந்த கொள்கைகள் எமது மூலோபாய சீரமைப்பு மற்றும் பங்குதாரர்களுடனான இணைப்பை வழிநடத்துகிறது.

எமது மூன்று மூலோபாய தூண்களில் நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றோம்: அவையாவன பல்வகைப்படுத்தல், வேறுபடுத்தல் மற்றும் ஒத்துழைத்தல். ஒன்பது மூலோபாய முன்னுரிமைகள் ஊடாக அவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

## டிஜிட்டல் பரிணாம வளர்ச்சி ஊக்கம்

கடந்த வருடத்தின் பிரதான ERP நிறைவேற்றலைத் தொடர்ந்து, 2024/25ஆம் ஆண்டுகளில் செயற்பாட்டு தொடர்ச்சியினை உறுதி செய்யும் அதேநேரம் மாற்றத்தின் சிக்கல்களை நாம் கடந்து வந்துள்ளோம். எமது குழுவின் அர்ப்பணிப்பு முதல் கட்டத்தின் நிலைப்படுத்தல் மற்றும் செயற்திறனை உறுதிசெய்துள்ளது. 2025/26ஆம் ஆண்டுகளில் ERP யின் இரண்டாம் கட்டத்தை அறிமுகப்படுத்த நாம் எதிர்பார்த்துள்ளோம். எமது உள்ளார்ந்த மற்றும் வெளிவாரியான பங்குதாரர்கள் ஆகிய இரு தரப்பினரதும் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் இதன் அடுத்த கட்டம் பெறுமதி சேர் செயற்பாடுகளின் தொகுதியாக அறிமுகப்படுத்தப்படும்

இதற்கிணைவாக, கட்டுப்பாடுகளை வலுப்படுத்தவும், செயற்திறனை மேம்படுத்தவும், நிகழ்கால தரவு துல்லியத்தை உறுதி செய்யவும் பங்குதாரர்களின் அனுபவத்தை முன்னேற்றவும் உள்ளார்ந்த செயற்பாடுகள் ஊடாக பல்வேறு டிஜிட்டல்மயமாக்கல் திட்டங்களை நாம் மேற்கொண்டோம். டிஜிட்டல் நகர்வு மற்றும் நலிவடைந்த புத்தாக முயற்சிகளை இயக்குவதற்கு அர்ப்பணிப்புமிக்க பரிணாமமடைந்த குழு இப்பொழுது வர்த்தக பிரிவுகளுடன் கூட்டு சேர்ந்துள்ளது. இதன்மூலம் வரும் ஆண்டிலும் அதற்கு பின்னரும் உண்மையான நன்மைகளை நாம் எதிர்பார்க்கின்றோம்.

## எதிர்காலத்திற்கான மீள் எழுச்சி மற்றும் நிர்மாணத்திற்கான ஆண்டு

நிதியாண்டின் பிற்பகுதியில் பொருளாதார அலை மீண்டும் ஆரம்பமாகியது. நிர்மாண பணிகளின் மறுசீரமைப்பு மற்றும் வாகன இறக்குமதி தடை நீக்கம் என்பவற்றினால் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த அபிவிருத்திகளின் முழுமையான தாக்கத்தை FY 2025/26ம் ஆண்டுகளில் கண்டுகொள்ள முடியும். இந்த ஆண்டுக்கான எமது செயல்திறன்கள், மீள் எழுச்சி மற்றும் எமது குழுவின் விடாமுயற்சியை பிரதிபலிக்கின்றன.

கட்டுப்பாடுகளைக் கொண்ட சந்தை நிலைமைகள் இருந்த போதிலும், கடந்த ஆண்டை விட பொருளாதார நகர்வுகளைக் கொண்ட பிரிவுகள் இந்த ஆண்டில் உயர் நிதி செயல்திறனை பதிவு செய்தது. எமது உள்ளூர் வாகன பாகங்களின் ஒன்றிணைப்பு செயற்பாடுகள் மற்றும் மூலோபாய இறக்குமதி கொடுப்பனவுகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களின் தேவைகளை தொடர்ச்சியாக பூர்ததி செய்து, வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளின் போதும் செயற்பாடுகளை சுறுசுறுப்பாக மேற்கொண்டிருந்தோம். இலத்திரனியல் வாகனங்களின் அண்மைய அறிமுகம், எமது குழுமத்தின் நிலைத்தன்மை நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலும் எதிர்வரும் ஆண்டில் மேம்பட்ட செயல்திறனை வழங்கவும் இந்த பிரிவை நன்கு நிலைநிறுத்துகிறது.

குழுமத்தின் செயல்திறனில் ஆட்டோமோடிவ் பொறியியல் தீர்வுகள் பிரிவானது ஆணிவேராக இருந்து இந்த ஆண்டிற்கான குழும PBT க்கு அதிக பங்களிப்பை வழங்கியுள்ளது. நிதி பெறுபேறுகளுக்கு பின்புலத்தில், வாகன இறக்குமதி தடையின் போதும், வாடிக்கையாளர்கள் தமது செலவுகளை குறைப்பை அணுக முடியாத சூழலிலும் எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களின் சிக்கலான தேவைகளை பூர்த்தி செய்வதை பேணி வந்துள்ளோம். இந்த தொகுப்பில் கல்வி பிரிவு உயர் பிரபல்யத்தைப் பெற்றது. இளைஞர்களுக்கு தொழில்சார் வழிகளை அடையாளம் காண்பிப்பதுடன் FY 2025/26ம் ஆண்டுகளில் திட்டத்தை விரிவாக்கவுள்ளது.

உள்ளக செலவுகள் மற்றும் விளிம்பு நிலை அழுத்தத்தை குறைப்பதில் மொத்த சில்லறை தொகுப்பு சவாலை எதிர்கொண்ட போதிலும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு முழுவதும் உயர் நிதி செயல்திறனை பதிவு செய்துள்ளது. பல்வேறு வருமான வழிகள் செயல்திறனில் அழுத்தங்களுக்கு உட்பட்டிருந்த தருணத்தில், வாகன உதிரிப் பாகங்கள் மற்றும் டயர்களின் வருமான வழிகள் வளர்ச்சியை ஏற்படுத்தியது. தற்போதைய சந்தை கேள்விகளுக்கமைய இந்த தொகுப்பானது கட்டமைப்பு மாற்றங்களுக்கும் விற்பனை நடவடிக்கையின் மறுசீரமைப்பிற்கும் உட்பட்டது. மூலோபாய விநியோக சங்கிலி மறுசீரமைப்பு மற்றும் செயன்முறை முன்னேற்றங்கள் எதிர்வரும் ஆண்டில் பலமான வருவாய் பெறுபேறுகளை பெற்றுக்கொடுக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்த தொகுப்பின் இரசாயன தீர்வுகள் பிரிவானது, இரசாயன தீர்வுகள் களத்தினுள் பல்வேறு வழிகளில் நிதி செயல்திறன் மற்றும் நிலையான தயாரிப்பு புத்தாக்கங்களின் அடிப்படையில் வளர்ச்சியை திட்டமிடுகிறது.

இந்த ஆண்டில் வருமான வளர்ச்சி காணப்பட்ட போதிலும், விவசாய தொகுப்பு ஆண்டிற்கான குழுமத்தின் இலாபத்தில் எதிர்மறையான பங்களிப்பை வழங்கியது. சீரற்ற காலநிலை நிலைமைகள் மற்றும் விவசாய மூலப்பொருள் வருமான வழிகளை பாதிக்கும் கடுமையான போட்டித்தன்மை மிக்க விலை என்பவற்றால் பாதிக்கப்பட்டது. எனினும் இந்த ஆண்டில் புதிய முயற்சிகள், விவசாய தொழில்நுட்பம் மற்றும் தொகுப்பில் உள்ள முன்னேற்றங்கள் ஆகியவற்றின் மூலதனச் செலவினங்களில் மேலும் முதலீடு செய்யப்பட்டது. இந்த துறையின் திறன், குழுவின் வரையறை உத்திகள் மற்றும் குழுமம் உட்பட தொழிற்துறைக்கான நிலையான பங்களிப்பு பாராட்டுதலைப் பெற்றது. இந்த ஆண்டில் எமது உள்ளூர் மதிப்பை அதிகரிக்கும் தயாரிப்புகளுடன் ஏற்றுமதி சந்தையில் நாம் காலடி எடுத்து வைத்துள்ளோம். அத்துடன் 2025/26ம்

ஆண்டுகளில் இந்தப் பகுதியில் நேர்மறையான திருப்புமுனைகளை சந்திப்பதை எதிர்பார்க்கின்றோம். இந்தத் துறையின் எதிர்காலத்தில் நாம் நம்பிக்கையுடன் இருக்கின்றோம். அத்துடன் FY 2025/26ம் நிதியாண்டிலும் அதற்குப் பின்னரும் அதன் முழு திறனையும் வெளிப்படுத்த வாக்குறுதி வழங்கியுள்ளோம்.

நிர்மாணத் துறை மீண்டும் முன்னேற்றமடைந்து வருவதால், உட்கட்டமைப்பு பொறியியல் பிரிவின் மறுமலரச்சிக்கு தயாராக உள்ளது. FY 2025/26ம் நிதியாண்டிற்கான வழிமுறைகள் இந்த பிரிவின் செயல்திறன் குறித்த புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையை பிரதிபலிக்கின்றது.

மருத்துவ உபகரணங்களுக்கான கேள்வி குறைந்து, சுகாதார பராமரிப்பு பிரிவு பின்னடைவைச் சந்தித்தது. ஔடதங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களின் துறைகளின் செயல்திறனை புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சக்திவலு பொறியியல் மற்றும் நிர்மாண தொழில்நுட்ப பிரிவானது புதுப்பிக்கத்தக்க சக்திவளத் துறையில் பாரிய நடவடிக்கையை மேற்கொண்டது. அத்துடன் குழுமத்திற்குள் ஒரு பலமான செயல்திறனாக பங்களிப்புச் செய்தது. பாரிய திட்டங்களுக்கு அப்பால் சக்திவலு பொறியியல் மற்றும் நிர்மாண தீர்வுகளை மேற்கொண்டது. புதுப்பிக்கத்தக்க சக்திவளங்கள் வரையறை குறிப்பிடத்தக்க நகர்வை அதிகரித்தது. இது நிதி ரீதியாகவும் நமது நீண்டகால நிலைத்தன்மை இலக்குகளை நோக்கியும் பங்களிப்புச் செய்தது.

எதிர்கால ஆண்டிற்கான எமது திட்டங்கள் தொடர்பில் நாம் நம்பிக்கையுடன் உள்ளோம். அத்துடன் எங்கள் முயற்சிகள் மற்றும் இந்த ஆண்டு ஒவ்வொரு பிரிவிலும் கட்டமைக்கப்பட்ட நகர்வுடன் சந்தை வாய்ப்புக்களைப் பயன்படுத்தி வலுவாக மீள வரவும், அதனூடாக எமது குழுமத்தின் நிதி செயல்திறனை நேர்மறையாக முன்னேற்றவும் அதிக ஆர்வத்துடன் உள்ளோம்.

**செயற்பாட்டு அவதானம்**

ஆய்வுக்குட்பட்ட ஆண்டில் எமது செயல்திறனை பிரதிபலிக்கும் வகையில், எதிர்கால ஆண்டின் இலக்கு, அவதானம் மற்றும் நடவடிக்கை என்பன தேவைப்படும் முக்கிய செயற்பாட்டு பகுதிகளை நாம் அடையாளம் கண்டுள்ளோம். செயற்பாட்டு வருவாய் மற்றும் பணப்புழக்க முகாமைத்துவத்தை வலுப்படுத்துவதற்கான செயற்பாட்டு முன்னுரிமைகளாக விளிம்பு முகாமைத்துவம், பணி மூலதன சிறப்பு நகர்வு மற்றும் உயர் நிலை செலவு முகாமைத்துவத்திற்கான புதிய கட்டமைப்புகள் உட்பட செயன்முறைகளை மேம்படுத்தல் ஆகியவை வெளிப்பட்டுள்ளன. இவை எமது முன்னேற்ற இலட்சியங்களை பூர்த்தி செய்கிறது. அவதானம் செலுத்தும் பகுதிகளுக்கான முயற்சிகளை நகர்த்த அர்ப்பணிப்புள்ள குழுக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

## குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி

### எதிர்காலத்திற்கான துரிதப்படுத்தல்

முன்னோக்கிச் செல்லும் போது நாம் அதனை தெளிவுடனும் நோக்கத்துடனும் மேற்கொள்கின்றோம். பரிணாமம்மிக்க எமது பயணம் எமது மூலோபாயத் தூண்களிலும், ஒன்பது மூலோபாய முன்னுரிமைகளிலும் நங்கூரமிட்டுள்ளது. (பக்கம் 22)

இந்த வழிகாட்டுதல் திட்டத்தை சிறப்பாக நிறைவேற்ற, தெளிவான சந்தை மேம்பாட்டிற்காகவும், டிஜிட்டல்மயமாக்கலை நகர்த்தவும், வளர்ந்து வரும் திறன் மற்றும் கலாசார மாற்றங்களின் தேவைகளுக்கு ஏற்ப புத்தாக்கம் மற்றும் வளர்ச்சியை வரவேற்கும் வகையில் எமது பிரதான செயற்பாடுகளான சந்தைப்படுத்தல், மனிதவளம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதி ஆகியவற்றை நாம் மறுசீரமைப்புக்கு உட்படுத்தியுள்ளோம்.

குழுமத்தின் உறுதியான நிலைத்தன்மை ஊடாக மூலோபாயங்கள் வழிநடத்தப்படுகின்றன. அத்துடன் இடர் முகாமைத்துவ கட்டமைப்பு: அதிகரித்த ஊக்கத்துடன் எதிர்காலத்தில் துரிதமாக செயற்பட எம்மை தயார்ப்படுத்தியுள்ளது.

### பெறுமதி சங்கிலியில் அவதானம்

துரிதமான வளர்ச்சி மற்றும் மூலோபாய பரிணமாத்திற்கான எமது இலட்சியங்களை அறிந்துகொண்டு, அனைத்து பங்குதாரர்களுக்கும் நீடித்த மதிப்பை உருவாக்குவதற்கான எமது பொறுப்புக்களில் நாம் உறுதியாக தொடர்ந்தும் இருக்கின்றோம். இந்தப் பயணத்தின் பிரதான

பங்காளராக, அமைப்பின் அனைத்து அம்சங்களிலும் மதிப்புச் சங்கிலியை மேம்படுத்துவதில் எமது அவதானத்தை செலுத்தியுள்ளோம். எமது ERP கட்டமைப்பில் மதிப்புச் சங்கிலியை வெற்றிகரமாக நிறைவேற்றல் மற்றும் செயற்படுத்தலுடன் கவனமாக வடிவமைத்து ஒழுங்கமைப்பதில் நாம் அவதான முயற்சிகளை எடுத்துள்ளோம். முக்கியமான செயற்பாடுகளை படிப்படியான முறையில் மையப்படுத்துவதற்கு சிக்கலான செயற்பாடுகள் மூலோபாய அடிப்படையில் மீள நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

விரைவான திர்மானம் எடுத்தலை செயற்படுத்துதல் மற்றும் கூர்மையான முறையில் வாடிக்கையாளர் அவதானத்தை ஈர்த்தல், வளமான வாடிக்கையாளர் அனுபவத்தை நோக்கி பயணிப்பது போன்ற விடயங்களில் தகவல் சீரமைப்பு பொறிமுறைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**செயலாற்றலின் மேற்பார்வை**

எமது நோக்கம் மற்றும் வர்த்தக நாம வாக்குறுதிக்கான எமது ஆர்வமும் அர்ப்பணிப்பும் அனைத்து நேரங்களிலும் நிர்வாகம், அபாயமான மற்றும் சந்தர்ப்ப முகாமைத்துவம் ஆகியவற்றின் வீரியமுள்ள கட்டமைப்பில் உள்ளன. இந்த கட்டமைப்புகள் கூட்டுத்தாபன நிர்வாகம், தகவல் தொழில்நுட்பம், சைபர் பாதுகாப்பு நிர்வாகம் மற்றும் நிலைத்தன்மை நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இவை அனைத்தும் எமது செயற்பாட்டிற்கு தேவையான கட்டமைப்பை வழங்குகின்றன.

DIMOவின் பெறுமதிகள், நிலையான கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் ஊடாக நிறுவனம் வேரூன்றியுள்ளது. மூலோபாய தீர்வுகளில் நிலைத்தன்மையை உள்ளீடு செய்யும் அதேநேரம், உறுதியற்ற நிலைமைகளை முன்கூட்டியே நீக்குவதற்கு எமது அவதான மற்றும் சந்தர்ப்ப முகாமைத்துவ அமைப்புக்களையும் நாம் மேம்படுத்தியுள்ளோம்.

**ஊழியர்களின் உயர் அனுபவம் :**

மதிப்புக்குரிய எமது ஊழியர்களே இதனை அனைத்து நேரங்களிலும், இதனை சாத்தியப்படுத்துகின்றார்கள் என நாம் நம்புகின்றோம். சிறந்த ஈடுபாடு, அதிகாரத்தைக் கொண்ட மற்றும் பூரணமான பணியாளர்களை உருவாக்குவதன் ஊடாக DIMOவில் ஒரு சிறந்த மற்றும் நீடித்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவது ஆரம்பமாகிறது. இந்த நம்பிக்கை எமது தொடர்ச்சியான மாற்றத்திற்குரிய நிகழ்ச்சி நிரலின் பிரதான அம்சமாகும். அந்த நோக்கத்திற்கென திறன் மேம்பாடு மற்றும் அவற்றை தக்கவைத்துக்கொள்வதற்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம். கற்றல் சார்ந்த கலாசாரத்தை வளர்ப்பதில் கவனம் செலுத்தியுள்ளதுடன் ஒவ்வொரு மட்டத்திலும் வாடிக்கையாளரை திருப்திபடுத்துவதற்கான பொறுப்புணர்வை ஏற்படுத்துகின்றோம். முன்னேற்றகரமான கற்றல் மற்றும் மேம்பாட்டு தலையீடுகள் உள்ளிட்ட முக்கிய முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**உத்தரவாதம்**

DIMOவில் எமது பங்குதாரர்களுக்கான அடிப்படை உறுதிப்பாடாக வெளிப்படைத்தன்மையை நாம் நிலைநிறுத்தியுள்ளோம். ஒழுக்க நெறிமுறை மற்றும் வெளிப்படுத்தலின் மிக உயர்ந்த தரத்தை கடைபிடித்து எமது நிறுவன அறிக்கையிடலில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களினதும் உண்மை மற்றும் நம்பகத்தன்மையை நாம் உறுதி செய்கின்றோம். இந்த ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை குறித்த உறுதிப்பாட்டின் பிரதிபலிப்பாகும். சட்டபூர்வ சுயாதீன கணக்காளர்களின் உத்தரவாதத்திற்கு மேலதிகமாக, அறிக்கையிடல் பரப்பில் பக்கம் 5இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய வெளிப்படுத்தல்களுக்கு மூன்றாம் தரப்பின் உத்தரவாதத்தைப் பெற்றுள்ளோம்.

## நிலைத்தன்மை மற்றும் ESG பொறுப்பு

எமது மூலோபாய கட்டாயங்களுடன் இணைந்து, சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாக (ESG) பரிசீலனைகளை எமது வணிக மாதிரியின் உள்ளீட்டின் ஊடாக எமது நிலைத்தன்மை நிகழ்ச்சி நிரலை நாம் தொடர்ந்து பேணி வருகின்றோம். எமது "நிலைத்தன்மை நிகழ்ச்சி நிரல் 2030" நிதி வளர்ச்சியைத் தக்கவைத்து, சமூகத்திற்கும், சூழலுக்கும் நேர்மறையான பங்களிப்பை வழங்கும் எமது தூரநோக்கு மற்றும் குறிப்பிட்ட இலக்குகளை அடிகோடிட்டுக் காட்டுகிறது.

இந்த ஆண்டின் அறிக்கை எமது பிரதான ESG செயல்திறன் குறிகாட்டிகள் மற்றும் நாம் அடைந்த முன்னேற்றத்தை விளக்குகிறது. காலநிலை அவதானம் அதிகரித்துச் செல்வதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அவசரமாகவும், நோக்கத்துடனும் காலநிலை சவால்களை எதிர்கொள்வதன் மூலம் ஒரு பொறுப்புள்ள பண்ணாட்டு குடிமகனாக எமது பங்கை மீண்டும் உறுதிப்படுத்துகின்றோம்.

## நம்பிக்கையுடன் எதிர்நோக்குதல்

2025/26 நிதியாண்டில் நாம் நுழையும் போது, தெளிவு, நம்பிக்கை மற்றும் குறிக்கோளுடன் அதனைச் செய்கின்றோம். வெளிக்காட்டப்படும் மீள்தன்மை, கட்டியெழுப்பப்பட்ட ஊக்கம் மற்றும் முன்னெடுக்கப்பட்ட மூலோபாய மறுசீரமைப்பு ஆகியவை எதிர்கால வெற்றியில் எம்மை சிறப்பா நிலைநிறுத்தும்.

பணிப்பாளர்கள் குழு மற்றும் தலைமைத்துவ குழுவின் சார்பாக எம ஊழியர்கள், பங்காளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மாற்றங்களை உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நீண்டகால மதிப்புகளின் உருவாக்கம் ஆகியவற்றினால் வரையறுக்கப்பட்ட எதிர்காலத்தை நோக்கி

முன்னேறுவதற்கு மாத்திரமன்றி, துரிதப்படுத்துவதற்கும் உங்களின் தொடர்ச்சியான நம்பிக்கையும், ஆதரவும் எமக்கு ஊக்கமளிக்கின்றது.

உங்கள் நம்பிக்கைக்குரிய,

ஏ.ஜி.பண்டிதகே
குழும முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
2025 ஜூன், 05